2020 No. of Printed Pages : 4

2020

**4567**

*Register Number* | | | | | | | |

இரண்டாம் ஆண்டு

# கணிதம் கற்பித்தல்

# TEACHING OF MATHEMATICS

(Tamil Version)

கால அளவு : 3.00 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - அ

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x2=40**

1. நாற்று நடும்பொழுது பயன்படுத்தப்படும் மற்றும் தேக்கு மரம் நடும்பொழுது பயன்படுத்தப்படும் கணித கருத்துக்கள் யாவை ?

2. இயற்கணிதத்தில் உறுப்பு என்பது யாது ? எடுத்துக்காட்டு தருக.

3. வரைப்படங்களின் வகைகள் யாவை ?

4. முக்கோணத்தின் ஒரு பக்கம் நீட்டப்பட்டால் உண்டாகும் வெளிக்கோணத்தின் அளவு எவ்வாறு அமையும் என்பதை கூறுக.

5. சுய வினாக்களும், சுய சோதனைகளும் இடம் பெற்றுள்ள உத்திசார் கற்பித்தலை கூறி அதன் படிநிலைகளை எழுதுக.

6. $a = 2 + \sqrt{3}$, $b = 2 - \sqrt{3}$ எனில் $a+b$ மற்றும் $a-b$ என்பவை விகிதமுறு எண்ணா ? விகிதமுறா எண்ணா ?

7. கொடுக்கப்பட்டுள்ள தரவுகளுக்கு முகடு காண்க :
3.1, 3.2, 3.3, 2.1, 1.3, 3.3, 3.1

[ Turn over

8. ஒரு முக்கோணத்தின் கோண அளவுகள் 1 : 2 : 3 என்ற விகிதத்தில் உள்ளன எனில், அவற்றின் கோண அளவுகளை படத்தில் குறிக்கவும்.

9. வழிகாட்டுதல் செய்து மாணவர்களை ஊக்குவிக்க மீள்பார்வை மற்றும் திருத்தம் செய்தலை ஆசிரியர் எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் ?

10. ஆசிரியர் புதிர் கணக்குகளை கையாளுகின்றபோது கவனிக்க வேண்டியவை யாவை ?

11. 1562 என்ற எண்ணின் 5 -ன் இடமதிப்பிற்கும் 2640 என்ற எண்ணின் 6 -ன் இடமதிப்பிற்கும் இடையே உள்ள வித்தியாசத்தினைக் காண்க.

12. ஊடு பணியில் அமைந்த உற்று நோக்குதல் பகுதியில் ஆசிரியர் செயல்பாடுகள் என்ன ?

13. ஒவ்வொரு சதுரமும் சாய்சதுரம் ஆகும். சரியா ? தவறா ? ஏன் ?

14. பெருக்கல் தலைகீழி என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

15. கருத்துப் பரிமாற்றத்தின் வகைகள் யாவை ?

16. கணித வகுப்பறை இருவழி பரிமாற்றத்துக்கு இடமின்றி ஒரு வழி பரிமாற்றமாகவே உள்ளது எவ்வாறு ? அதனை களைய அரசு அறிமுகப்படுத்திய முறை யாது ?

17. கணிதக் கருத்துப் பரிமாற்ற தடைகளாக 2006 -ஆம் ஆண்டு லிம் (Lim) கூறிய ஏதேனும் இரண்டு கருத்துக்களை கூறுக.

18. கற்பித்தலில் மதிப்பீடு செய்வது ஆசிரியருக்கு எவ்விதத்தில் பயன்படுகிறது ?

19. ஒரு நல்ல சோதனை என்பது என்ன ? அதன் நம்பகத்தன்மை எப்போது அதிகமாக இருக்கும் ?

20. குறையறி சோதனையை பகுப்பாய்வு செய்யும்போது ஆசிரியராகிய நீவிர் கண்டறிந்து முறைப்படுத்துபவை யாவை ?

## பகுதி - ஆ

ஒவ்வொரு பிரிவிலிருந்து **5** வினாக்களை தேர்ந்தெடுத்து **10** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

### பிரிவு - 1

**5x4=20**

**21.** ₹ 1600 ஆனது 5% ஆண்டு கூட்டு வட்டி வீதம் கொண்டு எத்தனை ஆண்டுகளில் ₹ 1852.20 ஆகும் ?

**22.** கொடுக்கப்பட்ட பல்லுறுப்புக்கோவைகள் $(4x-5)$, $(2x^2+3x-6)$ -ஐ நிரல் முறை மற்றும் நிறை முறையில் கூட்டி தீர்வுக்கான ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய கற்பித்தல் படிநிலைகள் யாவை ?

**23.** புள்ளி விவரங்களை சேகரித்தலில் முதன்மை விவரங்களை சேகரிக்கும் வழிகள் யாவை ?

**24.** $(5y^3-25y^2+8y)$- ஐ $5y$ - ஆல் வகுக்க.

**25.** ஒரு முழு எண்ணின் மூன்று மடங்குடன் 9-ஐக் கூட்ட, 45 கிடைக்கிறது எனில், அந்த எண்ணைக் காண்க.

**26.** கீழ்க்கண்ட பரவலிற்கு படிவிலக்க முறையில் (நிகழ்வெண் பரவல் பட்டியல்) சுருக்கு வழியில் சராசரியை காண்க.

| பிரிவு இடைவெளி | 0 - 8 | 8 - 16 | 16 - 24 | 24 - 32 | 32 - 40 | 40 - 48 |
|---|---|---|---|---|---|---|
| நிகழ்வெண் ($f$) | 10 | 20 | 14 | 16 | 18 | 22 |

**27.** ஒரு பொருளின் மீது வழங்கப்படும் இரு தொடர் தள்ளுபடிகள் முறையே 25% மற்றும் 20% எனில் இதற்கு நிகரான ஒரே சமானத் தள்ளுபடிச் சதவீதத்தினைக் காண்க.

**28.** X, Y மற்றும் Z ஆகியோர் ஒரு வேலையை முறையே 4, 6 மற்றும் 10 நாட்களில் முடிப்பர். X, Y மற்றும் Z ஆகிய மூவரும் ஒன்று சேர்ந்து அந்த வேலையை முடித்தால் அவர்களுக்கு ₹ 31,000 வழங்கப்படும் எனில், அவர்கள் தனித்தனியேப் பெறும் பங்குகளைக் காண்க.

5x4=20

## பிரிவு - 2

29. கற்றல் செயல்பாடுகளில் எதிர்பார்க்கும் கற்றல் விளைவுகளை அடையும் வழிகளை அட்டவணைப்படுத்துக.

30. 2007 -ஆம் ஆண்டு கணிதக் கருத்துப் பரிமாற்றம் குறித்து மேற்கொள்ளப்பட்ட கணித வகுப்பறை ஆய்வில் வெளியிடப்பட்ட தகவல்கள் யாவை ?

31. நல்ல சோதனையின் பண்புகளை விளக்குக.

32. ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் கூடுதல் 180° என்பதை தீர்வாய்வு மையக் கற்றல் படிகளைப் பயன்படுத்தி எங்ஙனம் கற்பிப்பாய் ?

33. நாற்கரம் – வரையறு, அதன் பரப்பு காணும் சூத்திரத்தை வருவிக்கவும்.

34. உத்திசார் கற்பித்தலின் நோக்கங்கள் யாவை ?

35. தீர்வாய்வு மையக்கற்றல் சூழலில் மாணவர் எவற்றை கற்றுக்கொள்கிறார்கள் என்பதை விளக்குக.

36. இரண்டு எண்களின் கூடுதல் 60. அந்த எண்கள் 5 : 7 என்ற விகிதத்தில் உள்ளன எனில், அந்த எண்களை STAR உத்தியினைப் பயன்படுத்தி சரிபார்க்கவும்.

## பகுதி - இ

2x10=20

**இரண்டு** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

37. (அ) கணிதம் கற்றலில் சிரமப்படுவோர்களுக்கான கற்பித்தல் உத்திகளை பயன்படுத்தி கீழ்க்கண்ட கணக்கை எவ்வாறு கற்பிப்பாய் ? ஒரு கணினி மற்றும் கணிப்பான் இவற்றின் மொத்த விலை ₹ 31,000. ஒரு கணினியின் விலை ஒரு கணிப்பானின் விலையைவிட ₹ 29,000 அதிகம் எனில் ஒரு கணினியின் விலை மற்றும் ஒரு கணிப்பானின் விலையை கண்டறிந்து விடையினை சரிபார்க்கவும்.

**அல்லது**

(ஆ) கணித மன்றத்தின் நோக்கங்கள் மற்றும் அதன் செயல்பாடுகளை விளக்குக.

38. (அ) அலகு சோதனையை விளக்கி, ஐந்தாம் வகுப்பில் பின்னம் மற்றும் தசம எண்களை சதவீதமாக மாற்ற அலகு சோதனையின் படிநிலைகளை பயன்படுத்தி வினாத்தாள் தயாரிக்கவும்.

**அல்லது**

(ஆ) கருத்து வரைபட உத்தியை வரையறை செய்து, அதன் படிநிலைகளை கூறி, எடுத்துக்காட்டுடன் அதன் சிறப்பிற்கு இரு காரணங்கள் கூறுக.

-oOo-